# Jehovah Our God is One
# நமது தேவனாகிய யேகோவா ஒருவரே தேவன்

*"பிதாவாகிய ஒரே தேவன் நமக்குண்டு, அவராலே சகலமும் உண்டாயிருக்கிறது." 1 கொரிந்தியர் 8:6*

திரித்தவ போதனை பரவலாக ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்த போதிலும், நாங்கள் தேவன் ஒருவரே என்கிற வேதாகம போதனையில் மிகவும் நம்பிக்கை வைத்து இருக்கிறோம். இயேசு தேவனை பிதா என்றும், தம்மை தேவனுடைய குமாரன் என்றும் கூறினார். ஒரு பிதா ஜீவனை அளிப்பவர். ஒரு குமாரனானவர், ஒரு சந்ததி, ஒரு பிதாவிடமிருந்து ஜீவனை பெறுபவர். இந்த வித்தியாசம் பிதாவானவர் முன்பே இருந்தவர் என்பதை உணர்த்துகிறது. இயேசு தம்மைப்பற்றி கூறுகிறதாவது: "நான் தேவனிடத்திலிருந்து வந்திருக்கிறேன்." (யோவான் 8:42)

இயேசு, மனிதனாக வருவதற்கு முன்பாக தேவனிடத்திலிருந்து வருகிற லோகாசாக, வார்த்தையானவராக, செய்தியாக இருந்தார் என்ற வேதாகமத்தின் தெளிவான போதனையை நமது புத்தகங்களில் காண்பிக்கிறோம். மேலும் அவர் ஒரு தேவனாக அழைக்கப்பட்டார், ஆனால் பிதாவாகிய தேவனாக அல்ல. பிதாவும் குமாரனும் சமமாயிருப்பதைப் பற்றிய கேள்விக்கு, மனிதனின் சாட்சியத்தை நாம் ஏற்றுக் கொள்ளாமல், ஆவியினால் உந்தப்பட்ட வேதாகம எழுத்தாளர்களை நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும். தெய்வீக வார்த்தைகளில் சொல்லப்பட்டுள்ள பழமொழியைக் கூட ஏற்றுக் கொள்ள வேண்டாம். நாம் இயேசுவை கேட்போம். அவர் பதிலளிக்கிறதாவது: "என் பிதா என்னிலும் பெரியவராயிருக்கிறார்." "நான் சுயமாய் ஒன்றும் செய்கிறதில்லை; நான் கேட்கிறபடியே நியாயந்தீர்க்கிறேன்." "என் பிதா எல்லாரிலும் பெரியவராயிருக்கிறார்." "நான் என் பிதாவினிடத்திற்கும் உங்கள் பிதாவினிடத்திற்கும், என் தேனிடத்திற்கும் உங்கள் தேவனிடத்திற்கும் ஏறிப்போகிறேன்." "ஒன்றான மெய்த்தேவனாகிய உம்மையும், நீர் அனுப்பினவராகிய இயேசு கிறிஸ்துவையும் அறிவதே நித்திய ஜீவன்." (யோவான் 14:28; 5:30; 10:29; 17:3; 20:17)

இயேசு, தேவனுடைய முதல் சிருஷ்டி என்றும், யேகோவாவினால் நேரடியாக சிருஷ்டிக்கப்பட்ட ஒரே சிருஷ்டி என்றும், நமது புத்தகங்களில் நாம் குறிப்பிடுகிறோம். மேலும் யேகோவா தம்முடைய குமாரனைக் கொண்டே மற்ற எல்லா சிருஷ்டிகளையும் உண்டாக்கினார். மேலும் நாம் வாசிக்கிறதாவது: இயேசு "தேவனுடைய சிருஷ்டிக்கு ஆதியாக இருந்தார்," "சர்வ சிருஷ்டிக்கும் முந்தின பேறுமானவர்," "அல்பாவும், ஓமேகாவும், ஆதியும் அந்தமுமாயிருக்கிறார்." அவர் தேவனுடைய நேரடியான சிருஷ்டிக்கு ஆதியும் அந்தமுமாயிருக்கிறார். (வெளி.3:14; 22:13; கொலோ. 1:15; வெளி 1:8) அப்போஸ்தலர் அறிவிக்கிறதாவது: "ஆதியிலே, (யேகோவாவின் ஆதியல்ல, ஏனெனில் அவருக்கு ஆதியும் அந்தமும் இல்லை; உலகத்தின் ஆதியோ அல்லது மனிதனின் ஆதியோ அல்ல) வார்த்தை (லோகாஸ்) இருந்தது; அந்த வார்த்தை தேவனிடத்திலிருந்தது, அந்த வார்த்தை தேவனாயிருந்தது. சகலமும் அவர் மூலமாய் உண்டாயிற்று; உண்டானதொன்றும் அவராலேயல்லாமல் உண்டாகவில்லை." (யோவான் 1:1-3) இந்த விஷயம் தெளிவாக்கப் பட்டிருக்கிறதல்லவா? தேவையில்லாமல் நாம் ஏன் குழப்பமடைய வேண்டும்? வேதாகம ஆதாரம் இல்லாமல் இருண்ட யுகத்தில் ஏற்படுத்தப்பட்ட ஒரு கோட்பாட்டை ஆதரிப்பதற்கு தேவனுடைய வார்த்தையின் தெளிவான கூற்றுக்கு எதிராக ஏன் போராட வேண்டும்?

வேதாகமம் போதிக்கிறது போல், நாங்கள், கர்த்தராகிய இயேசு வானத்திலிருந்து வந்தார் என்றும், கன்னித்தாயிடம் பிறந்தார் என்றும், "அந்த வார்த்தையானவர் மாம்சமாகி, கிருபையினாலும் சத்தியத்தினாலும் நிறைந்தவராய் நமக்குள்ளே வாசம் பண்ணினார்; அவருடைய மகிமையைக் கண்டோம்; அது பிதாவுக்கு ஒரே பேறானவருடைய மகிமைக்கு ஏற்ற மகிமையாகவே இருந்தது" (யோவான் 1:14) என்று கூறியதையும் போதிக்கிறோம். இயேசு இரண்டு சுபாவத்தை பெற்றிருக்கவில்லை, ஒரே சுபாவத்தையே பெற்றிருந்தார். மேலான ஆவிக்குரிய சுபாவத்திலிருந்து மாம்சீக சுபாவத்திற்கு மாறினார். வேத வாக்கியம் கூறுவது போல, "அவர் ஐசுவரியமுள்ளவராயிருந்தும், நாம் அவருடைய தரித்திரத்தினாலே ஐசுவரியவான்களாகும்படிக்கு நமது நிமித்தம் தரித்திரரானார்." (2 கொரி. 8:9) அவர் தேவ கிருபையிலும், மனுஷர் தயவிலும் அதிகமதிகமாய் விருத்தியடைந்து மனிதனாக வளர்ந்தார். அவர் பரிபூரணரும், "பரிசுத்தமும், குற்றமற்றவரும், மாசில்லாதவரும் பாவிகளுக்கும் விலகினவருமாயிருந்தார்." (லூக்கா 2:52; எபிரேயர் 7:26)

### இயேசு ஒரு புது சிருஷ்டியானார்

முப்பது வயதில் இந்த பரிபூரணர், நியாயப்பிரமாணத்தின்படி மனித பருவத்தை அடைந்தவர்,

"ஒரு சரீரத்தை எனக்கு ஆயத்தம் பண்ணினீர்." "மரணத்தை உத்தரிப்பதற்காக" போன்ற வேத வாக்கியங்கள் நிறைவேறத்தக்கதாக அவருடைய ஜீவனை மனுக்குலத்தின் பாவத்திற்கு மாபெரும் பலியாக தேவனிடம் அர்ப்பணம் பண்ணினார். (எபி. 10:5; 2:9) மனிதனாகிய இயேசுவின் அர்ப்பணிக்கப்பட்ட பலி தேவனால் ஏற்றுக் கொள்ளப்பட்டத்திற்கு அடையாளமாக யோர்தானில் அவரை பரிசுத்த ஆவியினால் அபிஷேகம் பண்ணினார். அதிலிருந்து அவர் ஒரு பூரண மனித சரீரத்தையும், ஆவியில் ஜெநிப்பிக்கப்பட்ட, புதிய ஜெனிப்பிக்கப்பட்ட சிந்தையையும் உடையவரானார். பிறகு அவர் ஒரு புது சிருஷ்டியாக, தமது மாம்சத்தின் பலியை நிறைவேற்ற வேண்டியவராயிருந்தார்; அவரது புதிய சிந்தை-புது சிருஷ்டி பரிபூரணப்பட வேண்டியிருந்தது. "உலகம் உண்டாகிறதற்கு முன்னே" பிதாவிடம் அவருக்கு இருந்த மகிமையை தரும்படி பிதாவிடம் ஜெபித்தார். (யோவான் 17:5) அவர் தமது அடக்கத்தில் உயர்வான மகிமையை கேட்கவில்லை. கல்வாரியில் அவரது பலி நிறைவடைந்தது; அவரது புதிய சிந்தை, ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்ட புதிய சுபாவத்திற்கு பிதாவானவர் வாக்குத்தத்தம் செய்திருந்தபடி புதிய சரீரம் கொடுக்கப்பட்டது. "கனவீனமுள்ளதாய் விதைக்கப்பட்டு" அவர் "மகிமையுடைவராய் எழுப்பப்பட்டார்." "பலவீன முள்ளதாய் விதைக்கப்பட்டு" அவர் "பலமுள்ளவராய் எழுப்பப்பட்டார்." "ஜென்ம சரீரத்தில் விதைக்கப்பட்டு" அவர் "ஆவிக்குரிய சரீரத்தில் எழுப்பப்பட்டார்." (1 கொரிந்தியர் 15:43,44)

நமது கர்த்தர் ஆதியில் தேவதூதர்களைப் போல சிருஷ்டிக்கப்படவில்லை; ஏனெனில் அவர் பிதாவினுடைய நேரடி சிருஷ்டியாக இருந்தார், ஆனால் தேவதூதர்கள், குமாரன் மூலமாக, தேவனுடைய மறைமுக சிருஷ்டிகளாக இருந்தனர். அப்போஸ்தலர் பவுல், சகலமும் பிதாவினால் உண்டானதென்றும், குமாரன் மூலமாய் சகலமும் உண்டாயிற்றென்றும் அறிவிக்கிறார். (1 கொரிந்தியர் 8:6) இயேசு பிதாவினுடைய அனைத்து சிருஷ்டிப்பின் வேலைகளிலும், பிதாவினுடைய கனப்படுத்தப்பட்ட பிரதிநிதியாக (ஏஜெண்டாக) இருந்தார்.

நமது கர்த்தராகிய இயேசு, அவரது ஞானஸ்நானத்தில் பரிசுத்த ஆவியின் ஜெநிப்பித்தலை அவர் பெற்றபோது கிறிஸ்துவாக, அபிஷேகம் பண்ணப்பட்டவராக ஆனார். அவரது உயிர்த்தெழுதலில் அவர் கிறிஸ்துவாக பூரணப்படுத்தப்பட்டார். அவர் உலகத்திற்குள் பிரவேசிக்கும் முன்னதாக ஒரு வல்லமையுள்ள தேவனாக (வல்லமையுள்ளவர்) இருந்தார். யோர்தானில் அவர் பரிசுத்த ஆவியின் ஜெநிப்பத்தலை பெற்றதிலிருந்து அவர் ஒரு வல்லமையுள்ள தேவனாயிருந்தார்; இன்னும் அவர் ஒரு தேவனாக (a god) பிதாவின் வலது பாரிசத்தில் உட்கார்ந்திருக்கிறார். ஆனால் அவர் ஒரே தேவனாக (The God) இருக்கவில்லை, இருந்ததும் இல்லை, இனி இருப்பதும் இல்லை. அவர் உயிர்த்தெழுந்த பிறகு மகதலேனா மரியாளிடம் அவர் பேசின வார்த்தைகளை மறுபடியும் கவனிக்கவும்:" நான் என் பிதாவினிடத்திற்கும், உங்கள் பிதாவினிடத்திற்கும், என் தேவனிடத்திற்கும் உங்கள் தேவனிடத்திற்கும் ஏறிப்போகிறேன்," (யோவான் 20:17) பரிசுத்த பவுல் சொல்வதைக் கேளுங்கள்: "பிதாவாகிய ஒரே தேவன் நமக்குண்டு, அவராலே சகலமும் உண்டாயிருக்கிறது.....இயேசு கிறிஸ்து என்னும் ஒரே கர்த்தரும் நமக்குண்டு, அவர் மூலமாய் சகலமும் உண்டாயிருக்கிறது." (1 கொரிந்தியர் 8:6) மேலும் அப்போஸ்தலர் பவுல், யேகோவா தேவனை, "நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பிதாவாகிய தேவன்" என்றும், "நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பிதாவாகிய தேவன்" என்றும், "நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் தேவன்" என்றும் குறிப்பிடுகிறார். (2 கொரிந்தியர் 1:3; எபேசியர் 1:3,17)

### ஒரு பொதுவான, ஆனால் வேத ஆதாரமற்ற கருத்து

கர்த்தராகிய இயேசு ஒரு திரித்துவ தேவனின் இரண்டாவது நபரல்ல, "திரித்துவம்" என்பது வேத ஆதாரமற்ற கருத்தாக இருக்கிறது. பரிசுத்த பவுல் மேலே குறிப்பிடப்பட்ட அவரது வசனங்களில் இந்த காரியத்தை நேராக வைக்கிறார். மேலும் அவர் அறிவிக்கிறதாவது: "அவர் கொள்ளையாடி தேவனுக்கு சமமாயிருக்க எண்ணாமல், தம்மைத்தாமே வெறுமை யாக்கினார்." (பிலிப்பியர் 2:6) ஆனால் நமது பொதுவான மொழி பெயர்ப்பில் (common version) இயேசு, தான் பிதாவாகிய தேவனுக்கு சமமாக இருப்பதாகக் கருதினார் என்ற கருத்தைக் கொடுக்கிறது. ஆனால் அனைத்தும் இதற்கு மாறாக இருக்கிறது. நமது பொதுவான மொழி பெயர்ப்பு தவறானது என தெளிவாகிறது. அப்போஸ்தலர் எழுதிய அனைத்திலும் கிறிஸ்து தம்மைத்தாமே தாழ்த்தினார் என்றும், யேகோவாவோடு சமமாயிருக்க உரிமை கொண்டாடவில்லை என்றும் காண்பிக்கிறார்.

"திரித்துவம்" என்ற வார்த்தை வேதாகமத்தில் காணப்படவில்லை. திரித்துவத்திற்கு ஆதரவாக காண்பிக்கப்படும் வசனம் கூட ஐந்தாம் நூற்றாண்டில் சேர்க்கப்பட்டது என்று திரித்துவ கொள்கைக்காரர்களே ஏற்றுக் கொண்டனர். இது 1 யோவான் 5:7,8 வசனங்களின் ஒரு பகுதியாக இருக்கிறது. இந்த வசனத்தின் சேர்க்கப்பட்ட பகுதியை நாம் இங்கே அடைப்புக் குறிக்குள் காண்பிக்கிறோம். "(பரலோகத்திலே சாட்சியிடுகிறவர்கள் மூவர், பிதா, வார்த்தை, பரிசுத்த ஆவி என்பவர்களே, இம்மூவரும் ஒன்றாயிருக்கிறார்கள்; பூலோகத்திலே) சாட்சியிடுகிறவைகள் மூன்று, ஆவி, ஜலம், இரத்தம் என்பவைகளே, இம்மூன்றும் ஒருமைப்பட்டிருக்கிறது." திருத்திய மொழி பெயர்ப்பு, எம்பிடிக் டையக்லாட், அமெரிக்கன் ஸ்டாண்டர்டு யூனியன் மொழி பெயர்ப்பு, யங்க்ஸ் மொழிபெயர்ப்பு, கத்தோலிக்க திருத்திய மொழி பெயர்ப்புகளைப் பார்க்கவும். இந்த வசனப்பகுதி சேர்க்கப்பட்டது என்பதை பிரபலமான வேதவல்லுனர்களாகிய சர் ஐசக் நியூட்டன், பென்சன் (Benson), ஆதாம் கிளர்க் (Adam Clarke), ஹோர்னே (Horne), கிரிஸ்பெக் (Griesbach), டிஸ்சென்டார்ஸ் (Tischandors) மற்றும் ஆல்போர்டு (Alford) ஆகியோர் அறிவித்திருக்கிறார்கள்.

நமது கர்த்தராகிய இயேசு இல்லாமல் யேகோவா தேவன் மட்டும் இருந்த காலம் உண்டு என்பதை நமது

புத்தகங்களில் விளக்கியிருக்கிறோம். இயேசு,"தேவனுடைய சிருஷ்டிக்கு ஆதியாக இருந்தார்" என்று எப்படி வேதாகமம் அறிவிக்கக்கூடும்? (வெளி. 3;14) இந்த வசனங்களின் வெளிப்படுத்துதலுக்கு நாம் மதிப்புத்தரவில்லையென்றால் அதற்கு முக்கியத்துவம் என்ன இருக்கிறது? எந்தவித சந்தேகத்திற்கிடமின்றி இயேசுவுக்கு ஒரு ஆரம்பம் இருந்தது. இந்த ஆரம்பம் என்பது ஆதாமுக்காகவும் அவனது சந்ததிக்காகவும் ஒரு மனிதனாக பூமிக்கு வருவதற்கு முன்பிருந்த யுகத்திற்கு முற்பட்டது. நம்மை குறை கூறுபவர்கள் அதற்கு முன்பு நாம் எழுதினவைகளை அவர்கள் படிக்க வேண்டும். பிறகு அவர்கள் குறை கூறவே மாட்டார்கள், நேர்மையானவர்களாயிருந்தால். வேதாகமத்தை தேவனுடைய வார்த்தையாக கருதகிறவர்கள், குறை கூறுவதற்கு எந்தவித காரணமும் இல்லை என்பதை அறிவார்கள்.

## லோகாஸ் வானத்திலிருந்து பூமிக்கு மாற்றப்பட்டார்

கர்த்தராகிய இயேசு பூமிக்கு வருவதற்கு முன் வானத்திற்குரிய சுபாவத்தைப் பெற்றிருந்தார். நாம் கூறினது போல அகில உலகின் பாவத்திற்கும் மீட்கும் பொருளாக தமது மாம்சத்தை கொடுப்பதற்காக, தமது சுபாவத்தை பூமிக்குரிய சுபாவமாக மாற்றினார். இந்த மகா வேலையை நிறைவேற்றின பிறகு, முந்திய நிலைமையில் யேகோவாவுக்கு அடுத்தபடியாக இருந்தாலும், முந்தின மகிமையான நிலைமையைக் காட்டிலும் இன்னும் மேலான நிலைமைக்கு பிதாவினால் உயர்த்தப்பட்டார். கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலுக்குப் பிறகு அவரது நிலையைப் பற்றி பரிசுத்த பவுல் அறிவிக்கிறதாவது: "ஆதலால், எல்லாவற்றிற்கும் மேலாக உயர்த்தி, இயேசுவின் நாமத்தில் வானோர் பூதலத்தோர் பூமியின் கீழானோருடைய முழங்கால் யாவும் முடங்கும்படிக்கும், பிதாவாகிய தேவனுக்கு மகிமையாக இயேசு கிறிஸ்து கர்த்தரென்று நாவுகள் யாவும் அறிக்கை பண்ணும்படிக்கும், எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தை அவருக்குத் தந்தருளினார்." (பிலிப்பியர் 2:9-11)

இயேசு பூமியில் இருந்தபோது, அவர் எந்த விதத்திலும் ஒரு பாவமுள்ள மனிதனாக இருந்ததில்லை. கன்னி மரியாளிடத்தில் அவரது பிறப்புக்கூட அற்புதமாக இருந்தது. அவரது பரிசுத்த ஜீவன் மானிட நிலைமைக்கு மாற்றப்பட்டது. அவர், "பரிசுத்தரும், குற்றமற்றவரும், மாசில்லாதவரும் பாவிகளுக்கு விலகின" ஒரு மனிதனாக ஆக்கப்பட்டார். ஆகையால ஆதாமுக்கும் அவனது சந்ததியினர் அனைவருக்கும் பாவ நிவாரண பலியை கொடுப்பதற்கு தகுதியுள்ளவரானார். யோர்தானில் அவர் முழுகின காலம் வரை அவர் சாதாரண மனிதன் இயேசுவாக இருந்தார். ஆனால் அவர் அங்கே பெற்ற அபிஷேகம் அவரை மேசியாவாக, கிறிஸ்துவாக, தேவனுடைய அபிஷேகம் பண்ணப்பட்டவராக ஆக்கியது.

## "தெய்வீக சுபாவத்தில் பங்கு பெறுகிறவராக" ஆக்கப்பட்டார்

இயேசு மனிதனாக வருவதற்கு முன்பு, ஒரு தேவனாக வல்லமையுள்ள ஒருவராக, தேவதூதர்களுக்கும் மேலானவராக இருந்தார். அவர் குழந்தையாக பிறந்தபோது அவர் ஒரு தேவனே அல்ல, ஆனால் ஒரு மனித ஜீவி; அவர் முப்பது வயதில் முழு மனிதனான போது அவர் ஒரு தேவனாக இருக்கவில்லை. ஆனால் அவர் தெய்வீக சக்தியாகிய பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தைப் பெற்ற போது, இந்த ஆவியின் ஜெநிப்பித்தலால் அவர் வல்லமையுள்ள ஒருவர் ஆனார். அவர் உயிர்த்தெழுந்ததிலிருந்து, அவர் ஒரு தேவனாக, இதற்கு முன்பு இருந்ததைக் காட்டிலும் பெரியவராக, "தெய்வீக சுபாவத்தில் பங்குபெற்றவராக" ஆனார். ஏனெனில் அவரது சபை இந்த மகா உயர்த்துதலுக்கு அழைக்கப்படுகிறது. அவர்கள் அவர்களது கர்த்தரின் மகிமையை அடைவதற்கும் அவரோடு அவரது மணவாட்டியாக, அவருக்கு ஒப்பாக, அவரது மகிமையான சரீரத்தின் அங்கங்களாக இருக்கும்படியாக அழைக்கப்படுகிறார்கள். (2 தெசலோனிக்கேயர் 2:14; 1 யோவான் 3:2; வெளிப்படுத்துதல் 21:2,9; 22:17; 1 கொரிந்தியர் 10:16, 17:12:12,13,27; 2 பேதுரு 1:4)

நமது கர்த்தர் அவரது சபைக்கு மகா தலையாக இருக்கிறார். சரீரமானது அதே சுபாவத்தின் மகிமையில் பங்கு பெறவேண்டும். அவர் தமது மனித சுபாவத்தை, மனுக்குலத்தை வாங்குவதற்காக மரணத்தில் விட்டுக்கொடுத்தார். மூன்று நாட்களுக்குக் கொஞ்சம் குறைவாக கல்லறையில் மரித்து இருந்தார். எந்த விதத்திலும் அவர் உயிரோடிருக்கவில்லை; ஏனெனில் மரணம் என்பது ஜீவனற்ற நிலைமை. அவர் விட்டுவிட்ட தமது மனித ஜீவியத்தை திரும்ப எடுத்துக் கொள்ளமாட்டார். அது உலகிற்காக கொடுக்கப்பட்ட விலைக்கிரயம். அவர் தெய்வீக நிலைக்கு உயிர்த்தெழுப்பப்பட்டார். தேவனுடைய சிருஷ்டிகளில் இதற்கு முன்பு யாரும் இந்த அளவுக்கு உயர்த்தப்படவில்லை. அவரது சபையும் கூட அதன் தலையானவரின் இதே மகிமையான சுபாவத்திற்கே அழைக்கப்பட்டிருக்கிறது. அவரது சுதந்தரத்தில் பங்கு பெறவே சபையானது அழைக்கப்படுகிறது. தேவனுடைய வல்லமையினால் இயேசு மரித்தோரிலிருந்து உயர்த்தெழுப்பப்பட்டார். (ரோமர் 6:4; 8:11; அப்போஸ்தலர் 2:22, 24,32,33).

## திரித்துவக்காரரின் கருத்தில் குழப்பம்

கர்த்தராகிய இயேசுவைப்பற்றிய வேதாகமத்தின் சாட்சியத்தை பின்பற்றியதாலும் இருண்ட யுகத்தின் கேலிக்குரிய அறிவீனத்திலிருந்து தூக்கி எறியப்பட்டதினாலும் நாம் ஒரு பெரிய குழப்பத்திலிருந்து காக்கப்படுகிறோம் என்பதை ஒரு கணம் கவனியுங்கள். நமது தேவனை ஒரு சரீரத்தையுடைய மூவராகவும், மூன்று சரீரங்களையுடைய ஒருவராகவும் நினைப்பதிலிருந்து நாம் காக்கப்படுகிறோம். திரித்துவக்காரர்கள் இந்த விசுவாச அறிக்கைகளில் எதை எடுத்துக் கொள்வது என்பதை அறியாதிருக்கிறார்கள். சிலர் ஒன்றையும் மற்றவர்கள் மற்றதையும் எடுத்துக் கொள்கிறார்கள். ஆனால் இரண்டுமே பகுத்தறிவுக்கு ஒவ்வாதது. மூன்று ஒன்றல்ல, ஒன்று மூன்றல்ல. பிதாவும் குமாரனும் ஒன்றாயிருப்பதைக் குறித்து நமது கர்த்தரே விளக்குகிறார். அவரும் பிதாவும் ஒன்றாயிருப்பது போல அவரது சீஷர்களும் ஒன்றாயிருக்கும்படி அவர் ஜெபித்தார். நிச்சயமாக அவர்கள் ஒரே நபராக ஆக மாட்டார்கள். ஆனால் அவர்கள்

ஆவியிலும், சிந்தையிலும் நோக்கத்திலும், பிதாவும் அவரும் ஒன்றாயிருப்பதுபோல சீஷர்கள் அனைவரும் ஒன்றித்து இருப்பார்கள். யோவான் 17:20,23. ஐப் பார்க்கவும் இயேசுவின் சீஷர்கள் ஒவ்வொருவரும் தனது சித்தத்தை விட்டுக்கொடுத்து, தேவனுடைய சித்தத்தை செய்வதில் ஒரே சிந்தையும் ஒரே நோக்கமும் உடையவர்களாகிறார்கள். இயேசுவும் பிதாவும் ஒன்றாயிருக்கிறார்கள், ஏனெனில் இயேசு தமது சித்தத்தை பிதாவின் சித்தத்துக்கு அர்ப்பணித்தார். அவர் கூறுவதாவது: "என் சித்தத்தின்படியல்ல, உமது சித்தத்தின்படியே ஆகக்கடவது;" "நான் என் சித்தத்தின்படியல்ல, என்னை அனுப்பினவருடைய சித்தத்தை செய்யவே வந்தேன்;" "தேவனே, உம்முடைய சித்தத்தின்படி செய்ய, இதோ, வருகிறேன்." இவைகளெல்லாம் கர்த்தராகிய இயேசு பிதாவிடம் பேசிய வார்த்தைகள்.

திரித்துவக்காரர்களின் கருத்துக் குறித்து, அப்பாட் மற்றும் கோனன்ட்ஸ் மத அகராதி (Abbott and conant's Religious Dictionary) பக்கம் 944 கூறுவதாவது: "நான்காவது நூற்றாண்டின் ஆரம்பத்தில் திரித்துவக்காரர்களின் கருத்து விரிவடைந்து, ஒரு போதனையாக முறைப்படுத்த ஆரம்பித்தது. "**ஒரே தேவன்**" என்கிற சபையின் விசுவாசத்திற்கு ஒத்துப்போகும்படி முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. "இந்த பிரச்சனையை தீர்க்க முயற்சித்தும் திரித்துவம் என்கிற போதனை வெளிவந்தது." திரித்தவம் என்பது "இந்து மதத்தில் ஒரு முக்கியமான அம்சமாக இருக்கிறது. மேலும் பெர்சியா, எகிப்து, ரோமன், ஜப்பான் மற்றும் கிரேக்க நாடுகளின் மிகவும் பழமையான புராணங்களிலும் இது காணப்படுகிறது."

போப்பு சபையிலிருந்து புரட்டஸ்டண்ட் சபையார் பெற்ற மற்ற சில போதனைகளைப் போல இதுவும் ஏற்றுக் கொள்ளப்பட்டு, ஒப்புதல் அளிக்கப்பட்டது. ஆனால் படித்த அதரவாளர்களால் எந்தவித வேதாகம வசனத்தின் ஆதாரத்தையும் கொடுக்க முடியவில்லை. வேத ஆதாரமற்ற இந்த போதனையை, தங்கள் விசுவாசமாக அங்கீகரிக் காதவர்களை மத நம்பிக்கை இல்லாதவர்கள் என்று இவாஞ்சலிகல் அலையன்ஸ் (Evangelical Alliance) என்ற அமைப்பு தனது கட்டுரையில் அறிவித்தது. திரித்துவக்காரர்கள் எபிரேயர் 1:8ஐ எடுத்துக் கொண்டு இயேசுதான் யேகோவா என்று கூறுகிறார்கள். உண்மை என்னவென்றால், தேவன் என்ற வார்த்தைக்கு "தியோஸ்" என்ற அதே கிரேக்க வார்த்தையே வருகிறது என்பதை அவர்கள் கவனிக்கவில்லை. "தியோஸ்" என்ற வார்த்தை வல்லமையுள்ள எந்த ஒரு நபருக்கும் பயன்படுத்தப்படுகிறது. இதேபோல ஏலோஹிம் (Elohim) என்ற எபிரேயு வார்த்தை பயன்படுத்தப்படுகிறது.

நமது கர்த்தரின் தற்போதைய மகிமை, அவர் மனிதனாக வருவதற்கு முன்பிருந்த மகிமையைக் காட்டிலும் மேலானது என்று பிலிப்பியர் 2:8,9 வசனங்கள் குறிப்பாக காட்டுகின்றன. இல்லையென்றால் அது உயர்த்தப்பட்டதாகாது. இப்பொழுது அவர் சாகாமை, தெய்வீக சுபாவத்தைப் பெற்றிருப்பதால் அவரால் மரிக்க இயலாது. "கிறிஸ்து இனி மரிப்பதில்லை." மனித பாரம்பரியங்களை ஒப்பிட்டு பார்க்கும்போது, வேதாகம விளக்கம் எப்படி நேரடியாகவும், சாதாரணமாகவும், பொருத்தமாகவும் இருக்கிறது பாருங்கள்! இயேசுவும் பிதாவும் ஒரே தேவன் என்று சொல்லுகிறவர்கள் எவ்வளவு மாறுபாடுகளையும் குழப்பங்களையும் காண்கிறார்கள்! இது இயேசுவே பிதாவாகிய தேவனாக இருந்து கொண்டு பூமியில் இருக்கும்பொழுது, தேவனிடம் ஜெபிப்பதுபோல் பாவனை செய்தது, அவரை ஒரு மாய்மாலக்காரராக காண்பிக்கிறது. தேவன் யாராலும் சோதிக்கப்படக்கூடியவர் அல்ல என்று நாம் வாசிப்பதால், சாத்தான் இயேசுவை சோதித்தது ஒரு கேலிக்கூத்துதான் என்று தீர்மானிக்க வேண்டும். மேலும், பிதாவானவர் எப்பொழுதும் சாகாமையுடைவராக இருப்பதால், அவரால் மரிக்க முடியாது. இயேசு பிதாவாயிருந்தால், அவரால் எப்படி மரிக்க முடிந்தது? அவர் மரிக்கவில்லையென்றால், இயேசுவின் மரணத்தையும் அவரது உயிர்த்தெழுதலையும் குறித்து அப்போஸ்தலர் கொடுத்த சாட்சியங்கள் அனைத்தும் பொய்யானதாக இருந்திருக்கும். எனினும் அவர் மரித்தார் என்றும் வேதவாக்கியங்கள் அறிவிக்கிறது. "அவர்தம் ஆத்துமாவை (அவரது ஜீவனை) மரணத்திலூற்றினார்." அநேகர் உறுதிப்பட கூறுவது போல அவர் தனது சரீரத்தை ஊற்றவில்லை. (ஏசாயா 53:12)

அவர்கள், இயேசு உண்மையிலேயே மரித்தார் என்று "ஏற்றுக்கொண்டால், இன்னொரு குழப்பத்திற்கு ஆளாகிறார்கள். மூன்று தேவர்களும், அநேகர் நம்புவது போல ஒரே நபராக இருக்கிறார் என்று நம்பினால், இயேசு மரித்தபோது மூன்று பேரும் மரித்திருக்க வேண்டும். அப்படி எல்லோரும் மரித்துவிட்டால், இயேசுவை உயிர்த்தெழுப்பியது யார்? இதெல்லாம் எப்படி மூடத்தனமாக இருக்கிறது! இன்னும் பிதாவும் இயேசுவும் ஒரே ஆளாக இருந்தால், ஒரே ஜீவியாக இருந்தால், இயேசு மரித்த பொழுது பிதாவும் மரித்திருக்கவேண்டும். இப்படியாக நாம், அப்போஸ்தலரையும் தீர்க்கதரிசிகளையும் மற்றும் இயேசுவையும் கூட மறுத்துபேசலாமா? இன்னும் இருண்ட மற்றும் மூட நம்பிக்கையின் கடந்த காலத்தின் களங்கமுற்ற விசுவாச துரோக சபையால் கொடுக்கப்பட்டவைகளை பற்றிக்கொள்ள, அறிவு பூர்வமானதையும், விவேகத்தையும், அசட்டை பண்ணலாமா? அப்படியல்ல, "வேதத்தையும் சாட்சியாகமத்தையும் கவனிக்கவேண்டும். இந்த வார்த்தைகளின்படியே சொல்லாவிட்டால், அவர்களுக்கு விடியற்காலத்து வெளிச்சமில்லை."

## பரிசுத்த ஆவி சம்பந்தமாக வேதாகம சாட்சியம்

பரிசுத்த ஆவியைக் குறித்து வேத வாக்கியங்கள் என்ன கூறுகிறது என்பதை நாம் அடுத்து பார்ப்போம். பரிசுத்த ஆவி என்பது ஆள்தத்தவமுடைய, திரித்துவத்தில் மூன்றாவது தேவன் என்று பேர்சபைகளும், புரட்டஸ்டண்ட் மற்றும் கத்தோலிக்க சபையும் உறுதியாகக் கூறுகிறார்கள். இது எல்லாம் "ஒரு பெரிய இரகசியம்"

என்று அவர்கள் கூறுகிறார்கள். ஆம், உண்மையிலேயே இது ஒரு இரகசியம்தான். பாபிலோன் பற்றிக்கொண்டிருக்கிற மனிதனால் ஏற்படுத்தப்பட்ட கோட்பாடுகளின் குழப்பம் நிறைந்த குணலட்சணம் ஒரு இரகசியம்தான். ஆனால் தேவனுடைய வார்த்தையிடம் திரும்பி, அதன் சாட்சியத்தைப் பார்க்கிறவர்களுக்கு எல்லாம் தெளிவாகவும் விளக்கமாகவும் இருக்கிறது. "பரிசுத்த ஆவி" என்ற பதத்தின் விளக்கம் எதுவாயிருந்தாலும், அறியப்பட்ட அனைத்து நிபந்தனைகளுக்கும், ஒத்துவருவதாகவும், அனைத்து வேத வாக்கியங்களுக்கும் இசைவாகவும் இருக்கிறதை அந்த பதத்தின் சரியான பொருள் என்று புரிந்து கொள்ளலாம் என்று நாங்கள் ஆலோசனை கூறுகிறோம். இந்த பதத்திற்கு சரியான பொருள் என்ன என்று நாங்கள் கருதுவதை முதலில் நாங்கள் கொடுக்கிறோம். நாங்கள் கூறுகிற கருத்து இந்த பதம் வருகிற எல்லா வேத வாக்கியங்களுடனும் இசைந்து வருகிறதா என்று சோதித்து பார்க்கும்படி வாசகர்களை கேட்டுக் கொள்கிறோம்.

பரிசுத்த ஆவி என்பது தேவனுடைய சித்தம், செல்வாக்கு வல்லமை அல்லது மனச்சார்பு என்று வேதாகமம் போதிப்பதாக நாங்கள் புரிந்து கொண்டிருக்கிறோம். அது எங்கேயும் எந்த நோக்கத்திற்காகவும் தெய்வீக சித்தத்தின்படி அப்பியாசப்படுத்தப்படுகிறது. தேவன் தமது ஆவியை அல்லது சக்தியை பல்வேறு வழிகளில் பலவித பிரதிநிதிகளைக் கொண்டு பல்வேறு பலன்களுக்காக அப்பியாசப்பபடுத்துகிறார். தேவன் நமது பிரதிநிதிகள் மூலமாக என்ன செய்தாலும் உண்மையிலேயே அது அவருடைய வேலையாக, அவரே நேரடியாக செயல்படுபவராக இருக்கிறார். ஏனெனில் அவரது அனைத்து பிரதிநிதிகளும் அவருடைய சிருஷ்டிகளாக அவருடைய சொந்த வல்லமையால் சிருஷ்டிக்கப்பட்டவர்களாக இருக்கிறார்கள். உதாரணமாக ஒரு கட்டட ஒப்பந்தக்காரர், எந்த ஒரு உபகரணத்தையோ, கட்டட பொருளையோ அவர் நேரடியாக தொடாமல் இருந்தால் கூட அவர் அந்த கட்டடத்தை கட்டுவதாக சொல்லப்படுகிறார். அவர் அதை தனது பிரதிநிதிகள் மூலமாகவும் பொருட்கள் மூலமாகவும் செய்கிறார். இப்படியாக, யோகோவா தேவன் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தார் என்று நாம் வாசிக்கும்போது, தேவன் நேரடியாக அவைகளை கையாண்டார் என்று யூகிக்கக்கூடாது. அவர் தமது பிரதிநிதிகளை பயன்படுத்தினார். "அவர் சொல்ல ஆகும், அவர் கட்டளையிட நிற்கும்." அவரது பரிசுத்த வல்லமை அவரது ஒரே பேறானவர் மூலமாக செயல்படுத்தப்பட்டது. கடந்த காலங்களில் அந்தந்த நேரத்தில் அவரது தீர்க்கதரிசிகள் மூலம் தேவனுடைய ஆவி செயல்படுத்தப்பட்டது. "தேவனுடைய ஆவியின்படியே அவர்கள் பேசினார்கள்." தேவனுடைய பரிசுத்த ஆவி நமது பொதுவான மொழி பெயர்ப்பில் ஆண்பாலில் அடிக்கடி சொல்லப்படுகிறது. ஏனெனில், ஆவியாயிருக்கிற தேவனுடைய பலத்தைக் குறிக்கும்படியாக ஆண்பாலில் குறிப்பிடப்படுகிறார். பரிசுத்த ஆவியை குறிப்பிடுகிற சுட்டுப்பெயர் (Pronoun) "அவர்" என்பது "அது" என்றும் மொழிபெயர்க்கப்படலாம். அநேக இடங்களில் அப்படி மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது. உதாரணத்திற்கு டயக்லாட் (Diaglott) மொழிபெயர்ப்பில் யோவான் 14:17,26ஐ பார்க்கவும். பரிசுத்த ஆவியைப் பற்றிய இந்த பாடத்தை இன்னும் அதிகமாக புரிந்து கொள்வதற்கு வேதாகம பாடங்கள் தொகுதி ஐந்தில் பாடங்கள் 8–11 வரை பார்க்கவும். அதில் இந்த பாடத்தை அதிகமாக விளக்கியிருக்கிறோம்.

"பிதாவின் கண்ணாடியைக் கொண்டு அவரது தலைக்கு
மேலாக ஒருவன் படிக்கிறான்,
அவனது பிதா கண்டது போல இவனும் காண்கிறான்;
மற்றவன் காம்பெல் மூலமாகவோ அல்லது ஸ்காட் மூலமாகவோ படிக்கிறான்.
தனது எண்ணத்தின்படியே அது கூறுவதாக நினைக்கிறான்.
சிலர் முன் ஏற்றுக் கொண்ட கோட்பாட்டை மெய்ப்பிக்க படிக்கின்றனர்.
அவர்கள் படிப்பதில் புரிந்துகொண்டது கொஞ்சமே;
அனைத்தும் நல்ல முடிவுக்கு இசைவாக்கும்படி
புத்தகத்தின் வாக்கியம் ஒவ்வொன்றையும் வளைக்கின்றனர்.
சில ஜனங்கள், நான் அடிக்கடி நினைக்கிறதுபோல
போதிக்கப்படுவதற்கு பதிலாக, புத்தகத்தை போதிப்பதற்காக படிக்கிறார்கள்."